Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

பதிவஞ்சல் ஒப்புகையுடன் :

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்பு துறை
இணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
வேலூர் மாவட்டம், அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு. சு.சங்கரமூர்த்தி, பி.இ.,

ந.க.எண்.457/2022/வே.மா.3, நாள்.05.08.2022.

பொருள்:	குடியிருப்பு மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம் / ஊராட்சி ஒன்றியம், செதுவாலை மதுரா மருதவள்ளிபாளையம் ஊராட்சி / கிராமம், சர்வே எண். 352/1A–ல் 0.97 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் – தொர்பாக.
பார்வை :	1. மனுதாரர் திரு. C.குமார் மற்றும் திருமதி. M.ஜெகதீஸ்வரி அவர்களின் கடிதம் நாள்.28.02.2022. (இணையதள விண்ணப்பம் எண். 20210520101 6142, நாள்.14.10.2021). 2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள். 06.05.2022.(சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது). 3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/போ, நாள். 24.12.2020. 4. மனுதாரர் திரு. C.குமார் மற்றும் திருமதி. M.ஜெகதீஸ்வரி அவர்களின் கடிதம் கடிதம். நாள்.30.05.2022. (சாலைகள் ஒப்படைக்கபட்டு தானப் பத்திரம் அசல் மற்றும் வில்லங்கச் சான்று சமர்ப்பிக்கப்பட்டது). 5. மனுதாரர் திரு. C.குமார் மற்றும் திருமதி. M.ஜெகதீஸ்வரி அவர்களின் கடிதம் கடிதம், நாள்.05.07.2022. (பிழை திருத்தல் பத்திரம் அசல் மற்றும் வில்லங்கச் சான்று சமர்ப்பிக்கப்பட்டது). 6. அரசாணை(நிலை)எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.04.06.2004. 7. அரசாணை(நிலை)எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.04.05.2017. 8. அரசாணை(நிலை)எண்.18, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020. 9. அரசாணை(நிலை)எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி[நவ4(3)]த் துறை, நாள்.23.09.2020.

	10. அரசாணை(நிலை)எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)]த் துறை, நாள்.09.12.2020. 11. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.30.08.2017. 12. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்13686/2017/LA1, நாள்.08.09.2017. 13. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/ந.ஊ.2, நாள்.05.02.2020. 14. இணை இயக்குநர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, வேலூர் மாவட்டம் அவர்களின் தடையின்மை சான்று கடித எண்.அ3/1317/2022, நாள்.23.02.2022. 15. பூங்கா பரப்பிற்கு ஈடான OSR கட்டணம் செலுத்துமாறு கோரப்பட்ட நாள். 25.04.2022. 16. பூங்கா பரப்பிற்கு ஈடான OSR கட்டணம் செலுத்தப்பட்ட நாள். 26.04.2022. 17. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள். 20.07.2022. (நன்னிலைவரி மற்றும் கொடிநாள் நிதி கட்டணம் கோரப்பட்டது). 18. மனுதாரரின் கடிதம், நாள்.28.07.2022. (நன்னிலைவரி கட்டணம் மற்றும் கொடிநாள் கட்டணம் செலுத்தப்பட்டது) * * * * * *

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம் / ஊராட்சி ஒன்றியம், செதுவாலை மதுரா மருதவள்ளிபாளையம் ஊராட்சி / கிராமம், சர்வே எண். 352/1A-ல் 0.97 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக 06.05.2022, நாளிட்ட கடிதம் மூலம், மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது.

பார்வை 4-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக மனைப்பிரிவு சாலைகள், மூலைமுடக்கு மற்றும் பொது உபயோகம் பகுதியினை தானப்பத்திர எண்.2092/2022, நாள்.24.05.2022-ன்படி, செதுவாலை மதுரா மருதவள்ளிபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் பதவிக்கு ஒப்படைக்கப்பட்டும் மற்றும் TANGEDCO ஒதுக்கீடு பகுதியினை தானப்பத்திர எண். 2093/2022, நாள்.24.05.2022-ன்படி கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வேலூர் மாவட்டம் அவர்களின் பதவிக்கு ஒப்படைக்கப்பட்டும் தானபத்திர ஆவணம் பெறப்பட்டது. மேற்படி ஆவணங்களில் பொது உபயோகம் மற்றும் TANGEDCO ஒதுக்கீடுகள் குறைவாக ஒப்படைக்கப்பட்டதால் பார்வை 5-ல் காணும் கடிதம் மூலம் பிழை திருத்தல் பத்திரம் எண்.2763/2022,

நாள்.04.07.2022-ல் பொது உபயோகமானது திருத்தம் செய்து செதுவாலை மதுரா மருதவள்ளிபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் பதவிக்கு ஒப்படைக்கப்பட்டும், பிழை திருத்தல் பத்திரம் எண்.2755/2022, நாள்.04.07.2022-ல் TANGEDCO ஒதுக்கீடு பகுதியினை திருத்தம் செய்து கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வேலூர் மாவட்டம் அவர்களின் பதவிக்கு ஒப்படைக்கப்பட்டும் தானபத்திர ஆவணம் பெறப்பட்டது.

மனைப்பிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி, ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.அ(வே.மா)எண்.62/2022 என எண்ணிடப்பட்டு, இரண்டு அசல் வரைபடங்கள் இரண்டு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

1. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது, மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகம் மற்றும் நில அளவைத் துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

3. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை :

1. (a) பார்வை 8-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47(11)-ன்படி, மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads. Storm water drains and street lights form the applicants". After collecting the necessary fees, the final layout sketch. Permit of Planning Authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning Authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும், (EWS) மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை

எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020-ன்படி, EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 11 மற்றும் 12-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி, உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்த வருவாய் ஆவங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O(Ms)No.112, Housing and Urban Development Department, dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி, நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 7-ல் கண்டுள்ள அரசாணையின்படி, திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், விதி என்.3-ன்படி, கூராய்வு கட்டணமாக ஒவ்வொரு மனைக்கும் ரூ.1000/-ம் வீதம் மற்றும் விதி எண்.9-ன்படி, இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா தான பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபாக்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. எனவே, சொத்தினை வாங்க, விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும், மேலும், அதன்மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால், அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

7. பார்வை 6-ல் கண்ட அரசாணையின் படி மனைப்பிரிவுகளுக்கான, நன்னிலைவரி மற்றும் Armed Force Flag Day Fund கட்டணம் ஆகியவை பார்வை 15 மற்றும் 17-ல் சுட்டியவாறு கோரப்பட்டு பார்வை 16 மற்றும் 18-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தபட்டுள்ளது. அதற்கான விவரம் பின்வருமாறு

i. OSR கட்டணம் ரூ.9,000/- ஆனது SBI வங்கி, சத்துவாச்சாரி கிளையில் 26.04.2022-ல் செலுத்தியதற்கான செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.

ii. நன்னிலைவரி கட்டணம் ரூ.9,000/-க்கான SBI, Vellore சத்துவாச்சாரி கிளை, நாள்.28.07.2022 செலுத்தியதற்கான செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.

iii. ரூ 5,000/- க்கான Armed Forecs Flag Day Fund என்ற பெயரில் Payable at Vellore, SBI Bank, D.D.No: 490027, Dt-28.07.2022 -ல் பெறப்பட்டுள்ளது.

இணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
வேலூர் மாவட்டம்.

05/08/22

<u>பெறுநர் :</u>

1. ஊராட்சி மன்ற தலைவர்,
செதுவாலை மதுரா மருதவள்ளிபாளையம் ஊராட்சி,
அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம்,
அணைக்கட்டு வட்டம்,
வேலூர் மாவட்டம்.

<u>இணைப்பு :</u>

i. மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் – 2 தொகுப்பு.
ii. தானப்பத்திர ஆவண எண்.2092/2022, நாள்.24.05.2022 – அசல்
iii. பிழைதிருத்தல் ஆவண எண்.2763/2022, நாள்.04.07.2022 – அசல்
iv. தானப்பத்திர ஆவண எண்.2093/2022, நாள்.24.05.2022 – நகல்
v. பிழைதிருத்தல் ஆவண எண்.2755/2022, நாள்.04.07.2022 – நகல்

<u>நகல் :</u>

1. மனுதாரர் முகவரி: திரு. C. குமார் மற்றும் திருமதி. M. ஜெகதீஸ்வரி, எண். 99, அண்ணா தெரு, சங்கரன்பாளையம், வேலூர் – 632 001.	இணைப்பு– செயலாணை கடிதம் மட்டும்

2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.	இணைப்பு– செயலாணை கடிதம் (ம) பூர்த்தி செய்த படிவம்–1, மனைப்பிரிவு வரைபடம்–1.
3. மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.	இணைப்பு– செயலாணை கடிதம் (ம) மனைப்பிரிவு வரைபடம்–1.
4. உதவி இயக்குநர், நில அளவை (ம) பதிவேடுகள் துறை, வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர் மாவட்டம்.	இணைப்பு– செயலாணை கடிதம் (ம) பூர்த்தி செய்த படிவம்–1, மனைப்பிரிவு வரைபடம்–1.
5. சார்பதிவாளர், குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலகம், வேலூர் மாவட்டம்.	பூங்கா, சாலை (ம) பொது உபயோக பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு
6. வட்டாட்சியர், குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம்.	
7. THE CHAIR PERSON, Tamil Nadu Real Estate Regulatory Authority, CMDA Tower – II, 1st Floor, No. 1A, Gandhi Irwin Bridge Road, Egmore,Chennai – 600 008.	இணைப்பு– செயலாணை கடிதம் (ம) பூர்த்தி செய்த படிவம்–1, மனைப்பிரிவு வரைபடம்–1.
8. பதிவறை	இணைப்பு– செயலாணை கடிதம் (ம) பூர்த்தி செய்த படிவம்–1, மனைப்பிரிவு வரைபடம்–1 (ம) குறுந்தகடு (CD)–1

மருதவல்லிபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின்
செயல்முறைகள் முன்னிலை திரு.எம்.எஸ்.பாபுஜி

79

நாள்:

ந.க.ஊ/

பொருள்: மனைப்பிரிவுகள் உள்ளாட்சிகளில் உத்தேச குடியிருப்பு இறுதி ஒப்புதல் அளித்தல்: அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம் மருதவல்லிபாளையம் ஊராட்சி திரு.C.குமார் மற்றும் M.ஜெகதிஸ்வரி என்பவரின் சர்வே எண்.352/1A-யில் 0.97 ஏக்கர் பரப்பில் 2912 ச.மீ பரப்பளவில் உத்தேச குடியிருப்பு புதிய மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கி உத்திரவிடுதல் - சார்பு

பார்வை:

1.நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் வேலூர்-1 அவர்களின் ந.க.எண் 457/2022/வே.மா.3 நாள்: 05.08.2022
2. அரசாணை (நிலை) எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ.4(3))த் துறை நாள் 04/05/2017
3. ஆய்வுக்கட்டணம் மருதவல்லிபாளையம் ஊராட்சி கணக்கு எண்.1-ல் செலுத்திய ரூ.1000/-க்காண ரசீது எண்.037062 நாள்16/08/2022
4. நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.9750/- Acct Code No: 02176080 AT22730) என்ற அரசு கணக்கில் செலுத்திய நாள்: 16/08/2022
5. மருதவல்லிபாளையம் ஊராட்சி தீர்மான எண் 22 நாள் 23.8.2022

உத்திரவு:

பார்வை (1)ல் குறிப்பிட்டுள்ள வேலூர் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியதிற்குட்பட்ட மருதவல்லிபாளையம் ஊராட்சி கிராமம் திரு.C.குமார் மற்றும் M.ஜெகதிஸ்வரி என்பவரின் (சர்வே எண்.352/1A 97 ஏக்கர் பரப்பில் 2912 ச.மீ பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உத்தேச மனைப்பிரிவிற்க்கு இருதி ஒப்புதல் பொது ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கான ஒதுக்கப்பட்ட இடத்தையும் தான பத்திர ஆவண எண்.2763/2022 நாள் 10/06/202 ல் படி மின்சாரதுறைக்கு பத்திர பதிவு எண்:2755/2022 நாள் 10/06/2022 மூலம் மேற்பார்வை பொறியாளர் TANGTDCO காட்பாடி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு தன் அலுவலர் மருதவல்லிபாளையம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

மேலும் விற்பனை செய்யப்பட உள்ள கீழ் குறிப்பிட்டுள்ள 27 மனைகளுக்கும் நிலப்பயன் மாற்றக்கட்டணங்கள் பார்வை (3) மற்றும் பார்வை(4) ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தின் படி உரிய தலைப்புகளில் செலுத்தி அதற்கான ரசீதுகள் சமர்பிக்கப்பட்டதை தொடர்ந்து அரசாணை எண்:79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3))த் துறை நாள் 05/08/2022 பார்வை (7)ல் குறிப்பிட்டுள்ள மருதவல்லிபாளையம் ஊராட்சி தனி அலுவலர் தீர்மான எண் 22 நாள் 23.8.2022ன் படி கீழ்குறிப்பிட்டுள்ள உத்தேச குடியிருப்பு 27 மனைகளுக்கு2612 ச.மீ க்கு அங்கீகாரம் அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

தலைவர்
மருதவல்லிபாளையம் ஊராட்சி
அணைக்கட்டு ஒன்றியம்,
வேலூர் மாவட்டம் - 632 104.

நகல்: திரு.C.குமார் மற்றும் M.ஜெகதிஸ்வரி
No.99, அண்ணா தெரு,
சங்கரன்பாளையம்,
வேலூர்-01

நகல்: சார்பதிவாளர், அலுவலகம் பள்ளிகொண்டா, வே.மா.
நகல்: நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் வேலூர்-01



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate